களும் திடீரென்று பரிசோதனைகளுக்குச் சென்று பல்வேறு விஷயங்களைக் கண்டுபிடித்துத் தக்க நடவடிக்கைகளை எடுத்து இருக்கின்றார்கள். இவர்கள் சுய உருவிலேயே செல்வதால் அதிகாரிகள் எச்சரிக்கையாகி அங்கேயுள்ள குறைகளை முன்னாலேயே தீர்த்து விடுகிறார்கள். எனவே இவர்கள் மாறுவேடத்திலே சென்று குறைகளைக் கண்டுபிடிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

* திரு. சா. பீட்டர் அல்போன்ஸ்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாறுவேடத்திலே செல்வதைப் பற்றி எங்களுக்குக் கவலை இல்லை. பெண் வேடம் போடாமல் இருக்க வேண்டுமென்று மட்டும் நான் கேட்டுக் கொள்கிறேன்.

* மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினருக்கு பெண் என்றால் அவ்வளவு வெறுப்பு எதற்காக? (சிரிப்பு).

2. உரிமைப் பிரச்சினை.

மின்துறை அமைச்சர் மீது.

மின்கட்டணப் பாக்கியைச் செலுத்த சலுகை வழங்குதல் பற்றிய கொள்கை அறிவிப்பை அவைக்கு வெளியே தெரிவித்தது குறித்து.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் ஓர் உரிமை மீறல் பற்றிய பிரச்சினையை உங்களிடத்திலே கொடுத்து இருந்தேன். அந்தப் பிரச்சினை என்னவாயிற்று என்பதை நான் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: அது என்னவென்று சுருக்கமாக உரைக்குமாறு கேட்டுக் கொள்கிறேன்.

திரு. எஸ். ஆர். பாலசுப்பிரமணியம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்தப் பேரவையிலே இருக்கிற உறுப்பினர்கள் ஆறாம் தேதியன்று பதவிப் பிரமாணம் எடுத்துக் கொண்டு, உங்களுடைய விளக்கப்படி எட்டாம் தேதி பேரவைத் தலைவர் தேர்தல் நடைபெற்றதற்குப் பின்னால் 11 ஆம் தேதி ஆளுநர் அவர்களுடைய உரையோடு இந்தச் சட்டமன்றத் தொடர் துவங்கியதாகப் பொருள் ஆகிறது. சட்டமன்றத் தொடர் துவங்கியதற்குப் பின்னால் எந்தக் கொள்கை விளக்கப் பிரகடனமும்

அவைக்கு வெளியே செய்யப்படக் கூடாது என்பது நாம் காப்பாற்றி வந்திருக்கிற மரபு. அந்த மரபினை மீறி மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் அவர்கள் அபராதமில்லாமல் மின்சாரக் கட்டணத்தின் பாக்கியைச் செலுத்த சலுகை வழங்கி அறிவிப்புக் கொடுத்திருக்கிறார்கள். இந்த அறிவிப்பு நிச்சயமாக இந்த அவையினுடைய, அவை உறுப்பினர்களுடைய உரிமையைப் பறிப்பதாகவும், நம்முடைய நிலையைக் குறைப்பதாகவும் இருப்பதாக நான் கருதுகிறேன். அதுமட்டுமல்ல, இந்தச் சலுகையைப் பற்றி ஆளுங்கட்சியினுடைய தேர்தல் அறிக்கையிலே குறிப்பிட்டிருக்கிறார்கள், விவசாயிகள் மின்வாரியத்திற்குத் தாமதமாகக் கட்டிய தொகைக்கு விதிக்கப்பட்டிருக்கும் வட்டி அறவே ரத்து செய்யப்படும் என்று கூறியதோடு அல்லாமல் விவசாயிகளுடைய பிரதிநிதிகள் இந்தக் கோரிக்கையை பழைய ஆட்சியில் பலமுறை வைத்தும், இப்போது கவர்னரிடம் 3 முறை நேரில் சொல்லியும் 7 முறை தமிழ்நாட்டிற்கு வந்து சென்ற பிரதமரை 5 முறை சந்தித்துச் சொல்லியும் கவனிக்கவில்லை, இப்படி விவசாயிகளை அலைக்கழித்து, இப்போது தேர்தலுக்காக தனது அறிக்கையில் இதைச் சேர்த்திருப்பது ஏமாற்று வேலை என்பதை விவசாயிகள் உணருவார்கள் என்று நம்புகிறோம் என்று குறிப்பிடப்பட்டது. ஆக இப்படிக் கூறுவதன் மூலம் அது ஒரு கொள்கை விளக்கப் பிரகடனம் என்று சொல்லப்படலாம். இது போன்ற அறிவிப்புகள் சபை நடந்து கொண்டிருக்கும்போது சபைக்கு வெளியே செய்யப்படுவது சபை உரிமையை மீறிய செயலாகும். எனவே சபை உரிமையை மீறிய குற்றத்திற்காகச் சம்பந்தப்பட்ட அமைச்சர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று கேட்டுக் கொள்ளுகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இது குறித்து மாண்புமிகு அமைச்சரிடமிருந்து விளக்கம் பெற்றேன். மாண்புமிகு அமைச்சர் அவர்கள், இந்தச் சலுகைகள் பலதரப்பட்ட விவசாயிகளிடமிருந்து வந்த முறையீடுகளின் பேரில் அரசு வழங்கியது என்றும், தமக்கு இந்தப் பேரவையைப் புறக்கணிக்க வேண்டும் என்றோ அல்லது அதன் கண்ணியத்தைக் குறைக்க வேண்டுமென்றோ எள்ளளவும் நோக்கமில்லை என்றும் கூறியிருக்கிறார்.

I have no doubt that when the House is in session and if an important announcement is made outside, no question of breach of privilege is involved. It was a practice being followed in the House of Commons and also in other State Legislatures which has taken form

of a tradition that the Ministers consider it good etiquette to make important announcements in the House when it is in session before doing so elsewhere.

இந்த மரபை அமைச்சர்கள் தொடர்ந்து கடைப்பிடிக்க வேண்டுமென்று கேட்டுக்கொள்கிறேன். தற்போது எழுப்பப்பட்டுள்ள பிரச்சினையில் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது, உரிமை மீறல் பிரச்சினை ஏதுமில்லை என்று கூறி, நிறைவு செய்கிறேன்.

1. தகவல் கோரல்—தொடர்ச்சி.

(ஆ) முதலமைச்சர் டெல்லியில் பிரதமரைச் சந்தித்துப் பேசியது குறித்த விவரங்கள்.

திரு. கோ. வீரையன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த அரசு பொறுப்பேற்ற பிறகு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் டெல்லிக்குச் சென்று, இந்த நாட்டின் பிரதமரைச் சந்தித்து, மாநிலத்தின் நிலை பற்றிப் பேசியதோடு, உணவு தானிய ஒதுக்கீடு, நிதியுதவி ஆகியவற்றைக் கேட்டு வந்ததாகவும், மேலும் பல்வேறு திட்டங்கள் குறித்து மத்திய அரசிடம் வலியுறுத்தி வந்ததாகவும் செய்திகள் வந்திருக்கின்றன. எனவே அதுபற்றிய முழு விவரத்தை இந்த அவையின் கவனத்திற்கு, மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் ஓர் அறிக்கையின் மூலமாகச் சமர்ப்பிப்பார்களா என்று அறிய விரும்புகிறேன்.

***மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி :** பேரவைத் தலைவர் அவர்களே, டெல்லியிலேயே அது குறித்து நிருபர்கள் கூட்டத்தில் விளக்கியிருக்கிறேன். அறிக்கையாகத் தரத் தேவையில்லை என்று கருதுகிறேன். கவர்னர் உரைக்குப் பதிலளிக்கிற நேரத்தில் அது பற்றிக் குறிப்பிடுகிறேன்.

(இ) ஏற்கெனவே தீர்ப்பளிக்கப்பெற்ற பிரச்சினை குறித்து

திரு. சா பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு தலைவர் அவர்களே, நேற்று நான் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் மீது ஓர் உரிமைப் பிரச்சினை கொண்டு வந்தேன். தாங்கள் அது குறித்துத் தீர்ப்புத் தந்தீர்கள். ஆனால், இன்று பத்திரிகைகளில் பார்த்திருப்பீர்கள் உரிமைப் பிரச்சினை எழுப்பியவரும் அது என்ன பிரச்சினை என்று சொல்லவில்லை, அப்போது தீர்ப்புத் தந்த மாண்புமிகு சபாநாயகரும் அது என்ன பிரச்சினை என்று